**TNTS0E0017432025**



**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செங்கோட்டை**

**முன்னிலை:திரு.S.இளையராஜா, M.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12 ம் நாள் வெள்ளிக்கிழமை

E.P. No.3/2025

IN

அசல் வழக்கு எண்.47/2018

CNR.NO:TNTS0E0017432025

அழகம்மாள். ...மனுதாரர்/வாதி

/எதிர்/

ஆறுமுகச்சாமி. ....எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது 10.09.2025 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.Y.ஆசாத் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.முருகன், அவர்கள் ஆஜராகியும் இருதரப்பும் கேட்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

இந்த நிறைவேற்றுதல் மனுவானது மனுதாரர்/வாதி தரப்பில், உ.வி.ந.மு.ச. கட்டளை 21, விதி 35 ன் படி அசல் வழக்கான அ.வ.எண்.47/2018 ல் ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் பேரில், மனு சொத்தினை மனுதாரர்/வாதி வசம் ஒப்படைக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

மனுதாரர் இந்த நிறைவேற்றுதல் மனுவை, கடந்த 03.04.2025 ம் தேதி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.47/2018 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பாணையின்படி, மனு

தபசில் சொத்திலிருந்து எதிர்மனுதாரரை அப்புறப்படுத்தி மனு தபசில் சொத்தின் சுவாதீனத்தை மனுதாரர் வசம் கொடுக்க கோரியும், மேலும் மனு சொத்தில் சுவாதீனம் எடுப்பதை எதிர்மனுதாரர் தடைசெய்தால், அதனை அகற்றி சட்டமுறைப்படி தபசில் சொத்தின் சுவாதீனம் கொடுக்கக்கோரி இந்த நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்துள்ளார்.

3) <u>எதிருரையின் சுருக்கம்</u> :–

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக்கூடியது. மனு தபசில் சொத்தானது மனுதாரரின் கணவருக்கு கிடைத்தாகவும், பின்பு வாரிசு முறையில் கிடைக்கப்பெற்றதாக கூறி இந்த எதிர்மனுதாரரிடம் ரூபாய் 1,20,000/–ம் கிரையம் பேசி பல்வேறு தேதிகளில் பணத்தை பெற்றுக்கொண்டு, தற்போது எதிர்மனுதாரரை ஏமாற்ற வேண்டும் என்று பொய்யான சங்கதிகளை கூறி தீர்ப்பாணை பெற்றுள்ளார்.

மேலும் மனுதாரர் பெற்ற தீர்ப்பாணைக்கு எதிராக, இந்த எதிர்மனுதாரர் தென்காசி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளதாகவும், மேலும் மனுதாரர், 1ம் எதிர்மனுதாரரிடம் அதிக பணம் கேட்டதற்கு மறுத்துவிட்டார். அதனால் அவரை அலைக்கழிக்க வேண்டும் என்ற தீய எண்ணத்தில் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இந்த நிறைவேற்றுதல் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யும்படி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) <u>பிரச்சினை</u> :–

இந்த நிறைவேற்றுதல் மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதுதான் இம்மனுவின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

<u>**பிரச்சினைக்கு தீர்வு :–**</u>

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. மனுதாரர் இந்த நிறைவேற்றுதல் மனுவை கடந்த 03.04.2025ம் தேதி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.47/2018 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பாணையின்படி, மனு தபசில் சொத்திலிருந்து எதிர்மனுதாரரை அப்புறப்படுத்தி, மனு தபசில் சொத்தின் சுவாதீனத்தை மனுதாரர் வசம் கொடுக்க கோரி இந்த நிறைவேற்றுதல் மனுவை தாக்கல் செய்துள்ளார். அதேவேளையில் எதிர்மனுதாரர் மேற்படி மனுதாரருக்கு அசல் வழக்கில் ஆதரவாக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை ஆட்சேபித்து தென்காசி முதன்மை சார்பு நீதிமன்றத்தில், மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதாக எதிர்உரையில் கூறியுள்ளார். ஆனால் அதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மாறாக, எதிர்மனுதாரரிடம் ரூ.1,20,000க்கு சொத்தினை கிரையம் பேசி பல்வேறு தேதிகளில் மனுதாரர் பணத்தை பெற்றுக் கொண்டதாக எதிர்உரையில் கூறியுள்ளார். இந்நீதிமன்றம் நிறைவேற்றும் நீதிமன்றம் என்பதால் மேற்படி எதிர்மனுதாரர் கூறிய சங்கதிகள் குறித்து பரிசீலனை செய்யத் தேவையில்லை. மேலும் மனு சொத்து குறித்து தரப்பினர்களுக்கு உள்ள Rights and Obligation குறித்து ஏற்கனவே முதல்நிலை தீர்ப்பாணையில் விசாரணை நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுவிட்டதால், இந்நீதிமன்றம் நிறைவேற்றுதல் நீதிமன்றம் என்பதால் தீர்ப்பாணைக்கு பின்பு சொல்ல தேவையில்லை. அதனால் மேற்படி எதிர்மனுதாரர் செய்த ஆட்சேபணையை இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்யவில்லை. எனவே நிறைவேற்றுதல் மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**7. முடிவாக,**

மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**Delivery by 26.09.2025.**

TNTS0E0017432025



இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.09.12 17:46:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், செங்கோட்டை.

**மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணம் :** இல்லை.

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணம் :** இல்லை.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.09.12 17:46:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், செங்கோட்டை.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
செங்கோட்டை
E.P.No.3/2025
IN
அ.வ.எண்.47/2018
நேரிய/வரைவு உத்தரவு
நாள்:12.09.2025.